TNRM100057492024



**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கடலாடி.**

**முன்னிலை : திரு.S.சாதுசிவசுப்பிரமணியன், பி.ஏ.,பி.எல்.**
**மாவட்ட உரிமையியல் மற்றும்**
**நீதித்துறை நடுவர், கடலாடி.**

**2026 ம் வருடம் மார்ச் மாதம் 23 ம் நாள் திங்கட்கிழமை**

**ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.23/2025**

| | | |
|---|---|---|
| 1. | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்ற எண். | சிக்கல் காவல் நிலைய குற்ற எண்.08/2023. |
| **1 வது எதிரியின் விபரம்** | | |
| 2. | பெயர் | முனீஸ்வரன் |
| 3. | தகப்பனார்/கணவர் பெயர் | ராமசாமி |
| 4. | வயது | 24/2024 |
| 5. | தொழில் | - |
| 6. | முகவரி | 1/5, சொக்கனை, கடலாடி தாலுகா, இராமநாதபுரம் மாவட்டம். |
| **2 வது எதிரியின் விபரம்** | | |
| 7. | பெயர் | ராமசாமி |
| 8. | தகப்பனார்/கணவர் பெயர் | குருநாதன் |
| 9. | வயது | 58/2024 |
| 10. | தொழில் | - |
| 11. | முகவரி | சொக்கனை. |
| **3 வது எதிரியின் விபரம்** | | |
| 12. | பெயர் | பேச்சியம்மாள் |
| 13. | தகப்பனார்/கணவர் பெயர் | ராமசாமி |
| 14. | வயது | 58/2024 |
| 15. | தொழில் | - |

SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Location: District Munisif cum Judicial Magistrate, Kadaladi.
Date: 2026.03.23 15:41:02 +0530

<table>
<tr><td>16.</td><td>முகவரி</td><td>சொக்கனை.</td></tr>
<tr><td>17.</td><td>சம்பவ நாள்</td><td>12.02.2024 ம் தேதி 19.30 மணி</td></tr>
<tr><td>18.</td><td>புகார் தேதி</td><td>12.02.2024 ம் தேதி 20.45 மணி</td></tr>
<tr><td>19.</td><td>எதிரிகள் கைது செய்யப்பட்ட நாள்</td><td>A1 – 15.02.2024<br>A2, A3 – இல்லை.</td></tr>
<tr><td>20.</td><td>பிணையில் விடுவிக்கப்பட்ட நாள்</td><td>A1 – 21.02.2024<br>A2, A3 – இல்லை.</td></tr>
<tr><td>21.</td><td>கமிட்டல் உத்தரவு</td><td>இல்லை</td></tr>
<tr><td>22.</td><td>விசாரணை துவங்கப்பட்ட நாள்</td><td>28.02.2025</td></tr>
<tr><td>23.</td><td>விசாரணை முடிவுற்ற நாள்</td><td>23.03.2026</td></tr>
<tr><td rowspan="2">24.</td><td>சாட்டப்பட்ட குற்றச்சாட்டு</td><td>1, 2 வது எதிரிகள் மீது இ.த.ச. பிரிவுகள் 294(b), 323, 324, 506(ii)ன் கீழும், 3 வது எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 294(b), 323, 506(ii)ன் கீழும்,</td></tr>
<tr><td>வனையப்பட்ட குற்றச்சாட்டு</td><td>1, 2 வது எதிரிகள் மீது இ.த.ச. பிரிவுகள் 294(b), 323, 324, 506(ii)ன் கீழும், 3 வது எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 294(b), 323, 506(ii)ன் கீழும்,</td></tr>
<tr><td>25.</td><td>காலதாமதத்திற்கான காரணம்</td><td>–</td></tr>
<tr><td>26.</td><td>அரசு தரப்பு சாட்சிகள்</td><td>
<table>
<tr><td>சாட்சிகள்</td><td>முதல் விசாரணை</td><td>குறுக்கு விசாரணை</td></tr>
<tr><td>அ.சா.1</td><td>12.03.2026</td><td>12.03.2026</td></tr>
<tr><td>அ.சா.2</td><td>12.03.2026</td><td>12.03.2026</td></tr>
<tr><td>அ.சா.3</td><td>13.03.2026</td><td>13.03.2026</td></tr>
</table>
</td></tr>
</table>

SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Location: District Munisif cum Judicial Magistrate, Kadaladi.
Date: 2026.03.23 15:41:06 +0530

| | | |
|---|---|---|
| 27. | எதிரிகளிடம் கு.வி.மு.ச பிரிவு 313(1)(ஆ)ன் படி விசாரணை செய்யப்பட்ட நாள் | 16.03.2026 |
| 28. | எதிரிகள் தரப்பு சாட்சிகள் | இல்லை |
| 29. | எதிரிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட கு.வி.மு.ச பிரிவின் படியான மனுக்கள் | M.P.No.04/2026 Petition U/s.320 Cr.P.C. filed and dismissed on 12.03.2026. |
| 30. | அரசு தரப்பு வழக்கறிஞர் | திரு.S.சொக்கேசன் |
| 31. | எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் | திரு.S.இராமநாதன் |
| 32. | எதிரிகளின் கூற்று | எதிரிகள் குற்றத்தை மறுத்து பொய் வழக்கு என்று கூறினார்கள். |
| 33. | தீர்ப்புரை பிறப்பிக்கப்பட்ட நாள் | 23.03.2026 |
| 34. | வழக்கின் முடிவு குறித்து எதிரிகளுக்கு தகவல் தெரிவிக்கப்பட்ட நாள் | 23.03.2026 |
| 35. | தீர்ப்பின் முடிவு | முடிவாக, மேற்கூறிய காரணங்களினால் இவ்வழக்கில் எழுகின்ற சந்தேகத்தின் பலன்களை எதிரிகளுக்கு சாதகமாக 1, 2வது எதிரிகள் இ.த.ச. பிரிவுகள் 294(b), 323, 324, 506(ii)ன் கீழும், 3வது எதிரி இ.த.ச. பிரிவுகள் 294(b), 323, 506(ii)ன் கீழும் குற்றவாளிகள் இல்லை என முடிவு செய்து எதிரிகளை கு.வி.மு.ச. பிரிவு 248(1)-ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பு அளிக்கப்படுகிறது. இவ்வழக்கில் வழக்குச் சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்பதால் |

SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Location: District Munisif cum Judicial Magistrate, Kadaladi.
Date: 2026.03.23 15:41:09 +0530

| | | |
|---|---|---|
| | | வழக்குச்சொத்து குறித்து உத்தரவு ஏதும் இல்லை. எதிரிகளின் பிணைப்பத்திரம் மேல்முறையீட்டு காலத்திற்குப்பின் ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது. |

இவ்வழக்கு என் முன்பாக இன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது அரசு தரப்பில் அரசு குற்றத்துறை வழக்கறிஞர் நிலை – 1 திரு.A.ராஜன் அவர்கள் ஆஜராகியும், எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.S.சொக்கேசன் அவர்கள் ஆஜராகியும், இந்நாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்த வழக்கில் இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்...

**தீர்ப்புரை**

1. இது ஒரு காவல் அறிக்கையின் பேரில் பதிவு செய்யப்பட்ட வழக்கு ஆகும்.

2. புகார்தாரர் குடும்பத்திற்கும், எதிரிகள் குடும்பத்திற்கும் முன்பகை இருந்து வந்த நிலையில், கடந்த 12.02.2024ம் தேதி மாலை 07.30 மணியளவில் புகார்தாரர் குளிப்பதற்காக வடக்கு சொக்கானை விலக்கு அருகில் சென்று கொண்டிருந்தபோது புகார்தாரரை பின் தொடர்ந்து சென்ற எதிரிகள் முன்பு நடந்த பிரச்சனையை மனதில் வைத்துக்கொண்டு ஏண்டா தேவிடியா மகனே ஊருக்கு வந்துடியாடா என அசிங்கமாக பேசியும், 1, 2 எதிரிகள் புகார்தாரரின் முதுகிலும், நெஞ்சிலும் அடித்து சாதாரண காயத்தை ஏற்படுத்தியும், எதிரிகள் மூவரும் போகும்போது கையில் வைத்திருந்த கத்திகம்பு மற்றும் கல்லை காட்டி தாயோளி இனிமேல் ஊருக்கு வந்தா உன்னை



SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Location: District Munisif cum Judicial Magistrate, Kadaladi.
Date: 2026.03.23 15:41:16 +0530

கொல்லாமல் விடமாட்டோம் என கொலை மிரட்டல் விடுத்த குற்றத்திற்காக 1, 2 வது எதிரிகள் மீது இ.த.ச. பிரிவுகள் 294(b), 323, 324, 506(ii)ன் கீழும், 3 வது எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 294(b), 323, 506(ii)ன் கீழும் குற்றம் சுமத்தப்பட்டு குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. குற்ற இறுதி அறிக்கையை பெற்று மேற்படி வழக்கானது 28.01.2025 ம் தேதியன்று நீதிமன்றத்தால் கோப்பிற்கு எடுக்கப்பட்டுள்ளது. எதிரிகள் பிணையில் சென்றுள்ளதால் அழைப்பாணை அனுப்ப உத்தரவிடப்பட்டுள்ளது. எதிரிகள் ஆஜரானதன் பேரில் கு.வி.மு.ச. பிரிவு 207 ன் கீழ் குற்றப்பத்திரிக்கை மற்றும் வழக்கின் நகல்கள் எதிரிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டுள்ளது. போதிய கால அவகாசத்திற்கு பின் 04.04.2025 ம் தேதியன்று எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் குறித்து வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டதன் அடிப்படையில் எதிரிகள் குற்றம் புரிந்திருக்கலாம் என அனுமானம் கொள்வதற்கு முதல் தோற்ற ஆதாரம் இருந்ததால் கு.வி.மு.ச. பிரிவு 240(1)ன் கீழ் 1, 2 வது எதிரிகள் மீது இ.த.ச. பிரிவுகள் 294(b), 323, 324, 506(ii)ன் கீழும், 3 வது எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 294(b), 323, 506(ii)ன் கீழும் குற்றச்சாட்டு வனைந்து அது குறித்து கு.வி.மு.ச. பிரிவு 240(2)ன் படி எதிரிகளுக்கு தமிழில் வாசித்து விளக்கிக் கூறி வினவப்பட்டுள்ளது. அதற்கு எதிரிகள் தாங்கள் குற்றவாளிகள் இல்லை என்று குற்றச்சாட்டினை மறுத்து வழக்கு விசாரணைக்கு வேண்டியுள்ளார்கள். எனவே அரசு தரப்பு சாட்சிகளின் விசாரணைக்கு கு.வி.மு.ச. பிரிவு 242-ன் கீழ் உத்தரவிடப்பட்டுள்ளது.

4. குற்ற இறுதி அறிக்கையில் கண்ட பட்டியல் சாட்சிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது. குற்ற இறுதி அறிக்கையில் மொத்தம் 9 சாட்சிகள் பட்டியல் சாட்சிகளாக காட்டப்பட்டுள்ளது. வழக்கின் புகார்தாரர் அ.சா.1 ஆகவும், சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சி அ.சா.2 ஆகவும், கூடுதல் சாட்சியாக நிலைய சார்பு ஆய்வாளர் அ.சா.3 ஆகவும் விசாரணை செய்யப்பட்டுள்ளார்கள். மற்ற சம்பவ சாட்சிகள், பார்வை மகஜர் சாட்சிகள், காயம்பட்டவருக்கு சிகிச்சையளித்த மருத்துவர், புலன் விசாரணை அதிகாரி ஆகியோர் விசாரணை செய்யப்படாமல் விட்டொழிக்கப்பட்டுள்ளார்கள். அரசுத் தரப்பில் அ.சா.ஆ.1 முதல் 7 வரை சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அரசுத் தரப்பில் சான்றுப் பொருள் குறியீடு செய்யப்படவில்லை. எதிரிகள் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரணை செய்யப்படவில்லை. எதிரிகள் தரப்பில் சான்றாவணங்கள் மற்றும் சான்றுப்பொருள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

5. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சிய சுருக்கம் பின்வருமாறு : அ.சா.1 தனது சாட்சியத்தில், சுமார் 2 ஆண்டுகளுக்கு முன்பு மாலை நேரத்தில் வடக்கு சொக்கானை விலக்கு அருகில் சென்று கொண்டிருந்தபோது 20 க்கும் மேற்பட்ட நபர்கள் சண்டை போட்டுக்கொண்டிருந்ததாகவும், அதைப் பார்க்க சென்றபோது யாரோ கீழே தள்ளிவிட்டதில் வலது பக்க முதுகில் மற்றும் நாடியில் ரத்தக்காயம் ஏற்பட்டது என்றும், தள்ளிவிட்டவர்கள் யார் என்று தெரியாது என்றும், புகார் மனுவில் உள்ள கையொப்பம் (அ.சா.ஆ.1) தன்னுடையது தான் என்றும், புகார் மனுவில் என்ன எழுதியிருந்து என்று

SADHU SIVA SUBRAMANIAN
Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Location: District Munisif cum Judicial Magistrate, Kadaladi.
Date: 2026.03.23 15:41:26 +0530

தெரியாது என சாட்சியம் அளித்துள்ளார். (அ.சா.1 யை ஒத்தே அ.சா.2 ம் சாட்சியம் அளித்துள்ளார்.)

6. அ.சா.3 தனது சாட்சியத்தில், கடந்த 12.02.2024 ம் தேதி இரவு 20.45 மணிக்கு சார்பு ஆய்வாளர் திருமதி.சாரதா நிலைப்பொறுப்பில் இருக்கும்போது சொக்கானை கிராமத்தை சேர்ந்த (இ) கீரைத்துறையில் இருக்கும் முனியசாமி த.பெ.ராஜபாண்டி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனு (அ.சா.ஆ.2)யை பெற்று புகார் மனுவின் தன்மைக்கேற்ப நிலையக் குற்ற எண்.16/2024 இ.த.ச. பிரிவுகள் 294(b), 323, 506(1)ன் கீழ் முதல் தகவல் அறிக்கை (அ.சா.ஆ.3) பதிவு செய்துள்ளார் என்றும், அன்றையே தினமே இரவு 21.30 மணிக்கு இவ்வழக்கு கோப்பினை தனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவ இடம் சென்று சாட்சிகள் நடராஜன் மற்றும் முருகன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் (அ.சா.ஆ.4) மற்றும் மாதிரி வரைபடம் (அ.சா.ஆ.5) தயார் செய்துள்ளார் என்றும், பின்பு பட்டியல் சாட்சிகளான முனியசாமி, சேதுவீரபாண்டியன், இராமலட்சுமி, மனோன்மணி, நடராஜன் மற்றும் முருகன் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளதாகவும், பின்பு இந்த வழக்கின் எதிரிகளை தேடி வந்த நிலையில் 1 வது எதிரியை சொக்கானை விளக்கு பேய்க்குளம் பஸ் ஸ்டாப்பில் வைத்து 11.30 மணிக்கு கைது செய்து 11.45 மணிக்கு நிலையம் அழைத்து வந்து திரேக பரிசோதனை செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார் என்றும், 2 மற்றும் 3 ஆம் எதிரிகளுக்கு Crpc Sec-41(A) ன் படி அறிவிப்பு அனுப்பப்பட்டதால் கைது செய்யவில்லை என்றும், சார்பு


SADHU SIVA SUBRAMANIAN
Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Location: District Munisif cum Judicial Magistrate, Kadaladi.
Date: 2026.03.23 15:41:34 +0530

ஆய்வாளர் திருமதி.சாரதா பணிமாறுதல் ஆகி சென்றுவிட்டதால் வழக்கு கோப்புகளை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட சார்பு ஆய்வாளர் திரு.கார்த்திக் வழக்கு கோப்புகளை தனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அ.சா.1 க்கு சிகிச்சை அளித்த இராமநாதபுரம் அரசு மருத்துவர் திரு.ராஜமூர்த்தி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து அவர் அளித்த அ.சா.1 க்கான காயச்சான்றுடன் கூடிய விபத்து பதிவேடு (அ.சா.ஆ.6) பெற்றுள்ளார் என்றும், அதில் அ.சா.1 க்கு ஏற்பட்ட காயத்தின் தன்மை சிறுகாயம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், வழக்கின் வழக்கின் சட்டப்பிரிவுகளை இதச பிரிவுகள் 294(b), 323, 506(1) இதிலிருந்து மாற்றம் செய்து 294(b), 323, 324, 506(2) ஆக சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை (அ.சா.ஆ.7) தயார் செய்துள்ளதாகவும், அத்துடன் புலன் விசாரணை முடித்து எதிரிகள் மீது இ.த.ச. பிரிவுகள் 294(b), 323, 324, 506(2)ன் கீழ் குற்ற இறுதி அறிக்கையை 22.11.2024 ம் தேதி தாக்கல் செய்துள்ளதாக சாட்சியம் அளித்துள்ளார்.

7. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியத்தில் இருந்து எதிரிகளுக்கு பாதகமாக உள்ள பகுதிகளை தொகுத்து எதிரிகளிடம் கு.வி.மு.ச. பிரிவு 313(1)(b)ன் கீழ் 23.03.2026 ம் தேதியன்று வினவியபோது, அதனை மறுத்து பொய் சாட்சியம் என்றும், தங்கள் தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்றும் கூறினார்கள்.

8. இந்த வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் 1, 2 வது எதிரிகள் மீது இ.த.ச. பிரிவுகள் 294(b), 323, 324, 506(ii)ன் கீழும், 3 வது எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 294(b), 323, 506(ii)ன் கீழும் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள்

அரசுத்தரப்பில் போதுமான சாட்சிய, சான்றாவணங்கள் மூலம் தகுநிலை ஐயப்பாடுகளுக்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதேயாகும்.

**தீர்வு**

9. இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. அரசு தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தின் போது எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றம் அ.சா.1 முதல் அ.சா.3 சாட்சிகள் மற்றும் அ.சா.ஆ.1 முதல் 7 வரையிலான சான்றாவணங்கள் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளதால் எதிரிகளுக்கு தக்க தண்டனை வழங்க வேண்டும் என்று வாதம் செய்தார். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தின்போது அ.சா.1 ம், எதிரிகளும் சமாதானம் ஆகிவிட்டார்கள் என்றும், அரசுத் தரப்பு சாட்சிகள் பிறழ் சாட்சிகளாகி சாட்சியம் அளித்துள்ளார்கள் என்பதாலும், அரசுத் தரப்பில் எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றம் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்படவில்லை என்பதால் இவ்வழக்கில் எழுகின்ற சந்தேகத்தின் பலன்களை எதிரிகளுக்கு சாதகமாக அளித்து எதிரிகளை விடுதலை செய்ய வேண்டும் என்று வாதம் செய்தார்.

10. இவ்வழக்கில் அ.சா.1 ம், எதிரிகளும் பெரியோர் முன்னிலையில் சமாதானமாகி விட்டதாக கு.வி.மு.ச. பிரிவு 320(2)-ன் கீழ் மனு தாக்கல் செய்து அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகிய சாட்சிகள் பிறழ் சாட்சிகளாகி அரசுத் தரப்பிற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளதால் அ.சா.1 முதல் அ.சா.3 தவிர இதர சாட்சிகள் விசாரணை செய்யப்படாமல் விட்டொழிக்கப்பட்டுள்ளார்கள்.

11. அ.சா.3 ஆவணங்களின் அடிப்படையில் அளித்த சாட்சியம் மற்றும் அவர்

SADHU SIVA SUBRAMANIAN
Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Location: District Munisif cum Judicial Magistrate, Kadaladi.
Date: 2026.03.23 15:41:45 +0530

மூலம் குறியீடு செய்யப்பட்ட சான்றாவணங்களை பரிசீலனை செய்யும்போது, கடந்த 12.02.2024ம் தேதி மாலை 07.30 மணியளவில் புகார்தாரர் குளிப்பதற்காக வடக்கு சொக்கானை விலக்கு அருகில் சென்று கொண்டிருந்தபோது புகார்தாரரை பின் தொடர்ந்து சென்ற எதிரிகள் முன்பு நடந்த பிரச்சனையை மனதில் வைத்துக்கொண்டு ஏண்டா தேவிடியா மகனே ஊருக்கு வந்துடியாடா என அசிங்கமாக பேசியும், 1, 2 எதிரிகள் புகார்தாரரின் முதுகிலும், நெஞ்சிலும் அடித்து சாதாரண காயத்தை ஏற்படுத்தியும், எதிரிகள் மூவரும் போகும்போது கையில் வைத்திருந்த கத்திகம்பு மற்றும் கல்லை காட்டி தாயோளி இனிமேல் ஊருக்கு வந்தா உன்னை கொல்லாமல் விடமாட்டோம் என கொலை மிரட்டல் விடுத்த குற்றத்திற்காக எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்கக்கோரி புகார்தாரரால் புகார் மனு அளிக்கப்பட்டுள்ளது.

12. சம்பவம் குறித்து அ.சா.1 புகார் மனு (அ.சா.ஆ.2) அளித்த போதிலும் தற்போது எதிரிகளுடன் சமாதானம் செய்து கொண்டு, சுமார் 2 ஆண்டுகளுக்கு முன்பு மாலை நேரத்தில் வடக்கு சொக்கானை விலக்கு அருகில் சென்று கொண்டிருந்தபோது 20க்கும் மேற்பட்ட நபர்கள் சண்டை போட்டுக்கொண்டிருந்ததாகவும், அதைப் பார்க்க சென்றபோது யாரோ கீழே தள்ளிவிட்டதில் வலது பக்க முதுகில் மற்றும் நாடியில் ரத்தக்காயம் ஏற்பட்டது என்றும், தள்ளிவிட்டவர்கள் யார் என்று தெரியாது என்றும், புகார் மனுவில் என்ன எழுதியிருந்து என்று தெரியாது என சாட்சியம் அளித்துள்ளதால் மேற்படி சாட்சியை அரசுத்தரப்பில் பிறழ் சாட்சியாக கருதி நீதிமன்ற அனுமதியுடன் குறுக்கு விசாரணை செய்த போதிலும்


SADHU SIVA SUBRAMANIAN
Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Location: District Munisif cum Judicial Magistrate, Kadaladi.
Date: 2026.03.23 15:41:48 +0530

அவரது சாட்சியம் அரசுத் தரப்பிற்கு ஆதரவாக இல்லை என்பதால் மேற்படி சாட்சியின் சாட்சியத்தின் தன்மை நிலையான நம்பத்தகுந்த சாட்சியமாக ஏற்றுக்கொள்ளும் விதமாக இல்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

13. அ.சா.1ன் சாட்சியம் அரசு தரப்பிற்கு முரண்பட்டு காணப்படுவதால் அ.சா.1 அளித்த புகார் மனு மற்றும் அதனடிப்படையில் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை ஆகியவற்றின் நம்பகத்தன்மை குறித்து சந்தேகம் எழுகிறது. அ.சா.1 முதல் அ.சா.3 தவிர மற்ற சம்பவ சாட்சிகள், பார்வை மகஜர் சாட்சிகள், புலன் விசாரணை அதிகாரி ஆகியோர் விசாரணை செய்யப்படவில்லை. கூடுதல் சாட்சியாக விசாரணை செய்யப்பட்ட நிலைய சார்பு ஆய்வாளர் அளித்த சாட்சியத்தை மட்டும் அடிப்படையாகக் கொண்டு எதிரிகள்தான் இவ்வழக்கின் குற்றத்தை செய்தார்கள் என்று அரசுத் தரப்பில் எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றம் நிரூபிக்கப்பட்டதாக முடிவு காண இயலாது. எனவே மேற்படி சாட்சிய, சான்றாவணங்கள் மூலம் 1, 2வது எதிரிகள் மீது இ.த.ச. பிரிவுகள் 294(b), 323, 324, 506(ii)ன் கீழும், 3வது எதிரி மீது இ.த.ச. பிரிவுகள் 294(b), 323, 506(ii)ன் கீழும் சுமத்தப்பட்ட குற்றம் சந்தேகத்திற்கிடமின்றி அரசுத் தரப்பில் நிரூபணம் செய்யப்படவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

14. முடிவாக, மேற்கூறிய காரணங்களினால் இவ்வழக்கில் எழுகின்ற சந்தேகத்தின் பலன்களை எதிரிகளுக்கு சாதகமாக 1, 2வது எதிரிகள் இ.த.ச. பிரிவுகள் 294(b), 323, 324, 506(ii)ன் கீழும், 3 வது எதிரி இ.த.ச. பிரிவுகள் 294(b), 323, 506(ii)ன்

கீழும் குற்றவாளிகள் இல்லை என முடிவு செய்து எதிரிகளை கு.வி.மு.ச. பிரிவு 248(1)-ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பு அளிக்கப்படுகிறது.

15. இவ்வழக்கில் வழக்குச் சொத்துக்கள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்பதால் வழக்குச்சொத்து குறித்து உத்தரவு ஏதும் இல்லை.

16. எதிரிகளின் பிணைப்பத்திரம் மேல்முறையீட்டு காலத்திற்குப்பின் ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்ட பின்னர், 2026ம் ஆண்டு மார்ச் மாதம் 23ம் தேதி திங்கட்கிழமை நாளான இன்று இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Location: District Munisif cum Judicial Magistrate, Kadaladi.
Date: 2026.03.23 15:41:56 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கடலாடி.

**அரசு தரப்பு சாட்சிகள் விபரம்:-**

| அ.த.சா. | அரசுத்தரப்பு சாட்சிகளின் பெயர் |
|---|---|
| அ.சா.1 | முனியசாமி (புகார்தாரர்) |
| அ.சா.2 | சேதுவீரபாண்டியன் (சம்பவ சாட்சி) |
| அ.சா.3 | குமரேசன் (நிலைய சார்பு ஆய்வாளர்) |

**அரசுத்தரப்பு சான்று ஆவணங்கள் விபரம்:-**

| | | |
|---|---|---|
| Ex.P.1 | 12.02.2024 | புகார் மனுவிலுள்ள கையொப்பம் |
| Ex.P.2 | 12.02.2024 | புகார் மனு |
| Ex.P.3 | 12.02.2024 | முதல் தகவல் அறிக்கை |
| Ex.P.4 | 12.02.2024 | பார்வை மகஜர் |
| Ex.P.5 | 12.02.2024 | மாதிரி வரைபடம் |
| Ex.P.6 | 13.02.2024 | காயச்சான்றுடன் கூடிய விபத்துப்பதிவேடு |
| Ex.P.7 | 13.02.2024 | சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை |

அரசு தரப்பு சான்று பொருள் :- இல்லை.

எதிரிகள் தரப்பு சாட்சிகள் :- இல்லை

எதிரிகள் தரப்பு சான்றாவணம் :- இல்லை

எதிரிகள் தரப்பு சான்று பொருள் :- இல்லை

SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Location: District Munisif cum Judicial Magistrate, Kadaladi.
Date: 2026.03.23 15:42:01 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கடலாடி.

குறிப்பு:-

1. சாட்சிகளின் விசாரணையின்போது எதிரிகள் பிணையில் இருந்தனர்.
2. சாட்சிகள் விசாரணைக்காக 3 நாட்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
3. தீர்ப்பு குறித்து குற்றமுறையீட்டாளர் காவல் நிலையத்திற்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.